# 17,000 இராணுவத்தினர் படையை விட்டு ஓட்டம்!

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திலிருந்து கடந்த பத்து வருடங்களில் 17,000க்கும் மேற்பட்ட படையினர் தப்பி ஓடிவிட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது. இதில் கடந்த வருடம் மட்டும் 7,000க்கும் மேற்பட்டோர் தப்பியோடியுள்ளனர்.

அண்மையில் சேர்க்கப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 19 இதழ் 230
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 5 - 10 - 1993

## ★ குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவு தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

பன்னிரு மைந்தர்கள் தினம் இன்று தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கை-இந்திய இராணுவத்தினரின் சதியால் 1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ம் திகதி பலாலி இராணுவமுகாமில் சயனைட் அருந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 12 வேங்கைகளின் 6ம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். இந்நாளையொட்டி இன்று பல இடங்களில் நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (வி-இ)

# விடுதலைப் புலிகளுக்கு அஞ்சி கிளாலியில் தரிக்க முடியாது

# ராணுவம் முற்றாக வாபஸானது

## பழைய இடத்திற்கு திரும்பின

(யாழ்ப்பாணம்)

கிளாலி-அல்லிப்பளை-புலோப்பளை பகுதிகளில் தரித்து நின்ற படையினர் அங்கு தொடர்ந்தும் நிலைகொள்ள முடியாத நிலையில் நேற்று நண்பகல் 11 மணியளவில் அப்பகுதிகளிலிருந்து முற்றாக வெளியேறி மீண்டும் ஆனையிறவு, இயக்கச்சி முகாம்களை சென்றடைந்துள்ளனர். (4-ம் பக்கம் பார்க்க)

## டாங்கிகள் கைவிடப்பட்டன

கிளாலிப் பகுதியிலிருந்து பின்வாங்கிய படையினர் விடுதலைப் புலிகளினால் மிகமோசமாக சேதமாக்கப்பட்ட இரு டாங்கிகள், ஒரு பவல் கவச வாகனம், ஒரு லாண்ட்றோவர் ஆகியவற்றை அங்கேயே கைவிட்டுச் சென்றுள்ளனர். இவை அனைத்தும் ஆங்காங்கே சிதறுண்ட நிலையில் நேற்று நண்பகலின் பின் காணப்பட்டன. இதேவேளை இத்தாக்குதலில் படையினரிடமிருந்து புலிகள் பெருமளவு ஆயுதங்களை கைப்பற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## 300 படகுகள் அழிக்கப்பட்டன

கிளாலி - அல்லிப்பளை - புலோப்பளை பகுதியிலிருந்து இராணுவத்தினர் வாபஸ் பெறும் போது முன்நூறுக்கும் மேற்பட்ட படகுகளை தீயிட்டுக் கொளுத்தி நாசமாக்கியதுடன் பயணிகள் படகுத்துறையையும் தகர்த்து அழித்துள்ளனர். மேலும் அங்கிருந்த பெருமளவு வீடுகளும், குடிசைகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. படையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட படகுகள் கரையோரங்களில் கிடக்கின்றனவாம்.

## கிளாலி பகுதி சுடுகாடானது

ஒபரேஷன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது கிளாலிப் பகுதியில் பல குண்டுவீச்சு விமானங்கள் மிகக்கடும் தாக்குதலை நடாத்தியதிலும், அகோர ஷெல் தாக்குதலும், பீரங்கித் தாக்குதலும் இடம்பெற்றதாலும் படையினர் கிளாலியிலிருந்து பின்வாங்கும்போது வீடுகள், குடிசைகளை முற்றாக தீக்கிரையாக்கி படகுகளை தீயிட்டு கொளுத்தியதாலும் கிளாலிப் பகுதி தற்போது 'சுடுகாடு' போலக் காட்சியளிக்கின்றது.

## அரசுக்கு பெரும் அவமானம்

விடுதலைப் புலிகளின் படகுகளை அழித்ததில் மாத்திரம் வெற்றியீட்டிக்கொண்டதாகப் பீற்றிக்கொள்ளும் சிறிலங்கா இராணுவம், பல படையினரையும், அதிகாரிகளையும், அதிகளவு டாங்கிகளையும், ஆயுதங்களையும் இழந்தும் பின்வாங்கியது பற்றித் தென்பகுதி மக்களுக்கு வகை சொல்லவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று பி. பி. ஸி. சிங்கள சேவையில் அதன் விமர்சகரான எட்மோ பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு வேளையில் தொண்டர் நிறுவன வாகனங்கள் வீதிகளில் இறங்க அரசு தடை!

(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனங்களினுடைய வாகனங்களை ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள வேளைகளில் பயன்படுத்த வேண்டாமென கொழும்பிலிருந்து அவசரமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஊரடங்கு வேளைகளிலும் இராணுவத்தாக்குதல் சம்பவங்களின் போதும் காயமடையும் மக்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு இவ் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்களே பயன்படுத்தப்பட்டு வருவதும், பலவேளை (4-ம் பக்கம் பார்க்க)

## 'ஒபரேஷன் யாழ்தேவி' முடிவுற்றதாம்

(கொழும்பு)

யாழ். குடாப்பகுதியில் படையினர் மேற்கொண்டு வந்த ஒபரேஷன் யாழ். தேவி இராணுவ நடவடிக்கை பூர்த்தியடைந்து விட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலின் இறுதிக் கட்டத்தைப் படையினர் அடைந்து கொண்டிருப்பதாகவும் பெரும்பாலும் படையினரின் நோக்கம் நிறைவேற்றப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார். (உ-இ)

## யாழ். அரச அதிபர் கடும் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் ஊரடங்கு வேளைகளில் சேவையில் ஈடுபடக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளதால் இடம் பெயர்ந்தவர்கள் பெருமளவு பாதிக்கப்படுவதுடன் மக்களுக்கு பல தரப்பட்ட அசௌகரியங்களும் ஏற்படுமென யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்ட மேற்படி உத்தரவை ஆட்சேபித்து அவசர செய்தி ஒன்றை சர்வ (4-ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி நோக்கி மண்டைதீவு ஷெல்!

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்திக்கண்மையிலுள்ள பொன்னம்பலம் என்பவரின் வீட்டின் முற்றத்தில், சோமசுந்தரம் தனலட்சுமி (வயது 50) கையில் காயமடைந்தார். வீட்டிலுள்ள தண்ணீர்த் தொட்டியில் வீழ்ந்த ஷெல்லினால் குழியும் அதற்குள் இருந்த பொருட்களும் சேதமடைந்தன.

வீட்டிலுள்ள ஏனையவர்கள் சற்று முன்பாக வீட்டின் முன் (4-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் ஹெலி சூடு; இருவர் காயம்

யாழ்ப்பாணம்

சாவகச்சேரியில் நேற்று மாலை 4-00 மணியளவில் அரிசி ஆலை ஒன்றின் மீது ஹெலி ஒன்று மேற்கொண்ட கலிபர் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கச்சாய் வீதியில் உள்ள மேற்படி மில்லின் மீதே கலிபர் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இத்தாக்குதலில் மில்லில் வேலைசெய்து கொண் (4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு (3-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### நீங்களும் எழுதலாம்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாசித்தால் நீங்களும் நாடகம்எழுதலாம். 1. கெட்டிக்காரர்கள். 2. முதலாம்பிள்ளை 30/- 19 வானொலி நாடகங்கள். (கி-499)



## அறிவுக் களஞ்சியம் --16--

சிறந்த அறிவியல் ஏடு இப்பொழுது விற்பனையாகிறது

விலை ரூபா 12/- மட்டுமே

(எ-3466


# 10,000 விவசாயிகளுக்கு உதவி வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆறு ஒன்றிணைந்து விவசாயிகளுக்கு உதவி வழங்க திட்டமிட்டுள்ளன. இதனடிப்படையில் பத்தாயிரம் விவசாயிகள் பயனடையவுள்ளனர். மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கென 7000 பேரும் நெற்பயிர்ச் செய்கைக்கென 3000 பேரும் இதற்கென அமைக்கப்பட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுவினரால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இப்பத்தாயிரம் விவசாயிகளுக்கும், விதைகளையும், உர வகைகளையும் வழங்க மேற்படி நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. இவை விரைவில் வழங்கப்பட்டு விடுமென அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து தெரியவருகிறது. -158

## மரம் நாட்டுவிழா

(பண்டத்தரிப்பு)

லயன்ஸ் உலக சேவைத் தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் வழக்கையாறு இந்து மயானத்திலும் அதற்கு சமீபத்திலுள்ள கத்தோலிக்க மயானத்திலும் மரம்நாட்டு வைபவம் ஒன்றை எதிர்வரும் 8-ம் திகதி நடாத்தவுள்ளது. (72)

# போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டோர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போசாக்குறைபாட்டால் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களின் வீதம் 15·1 ஆக தற்போது அதிகரித்துள்ளதாக அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது.

யுத்தகால சூழ்நிலைமைக்கு முன்னதாக இவ்வீதம் 3·8 ஆகவிருந்ததென்றும் தற்போதைய நிலையில் இது 18 9 வீதமாக உயர்ந்துள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு போசாக்குக் குறைபாட்டால் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய செயற்பாடுகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளலாமென இதற்கென நியமிக்கப்பட்ட குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர்.

உடனடி தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன் நீண்டகால குறுகியகால செயற்திட்டங்களும் இவர்களின் நலனை கருத்திற்கொண்டு வகுக்கப்படவுள்ளதாகவும் இணைவட்டாரங்களிலிருந்து அறியவருகின்றது. -158

## தாலிக்கொடி காணமல்போனது

(நெல்லியடி)

ஆலய தேர் உற்சவமொன்றின்போது பெண்மணி கழுத்தில் அணிந்துசென்ற 10பவுண் நிறையுடைய தாலிக்கொடி, தவறி நிலத்தில் வீழ்ந்து காணாமல் போனது இச் சம்பவம் நடந்த புதன்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றி புலோலி கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி தர்மலிங்கம் சிவனேஸ்வரி ஆலய-காவல் பணிமனையில் முறைவிட்டுள்ளார். -160

## சேவைக்கால பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

நகரப்புற அடிப்படைச்சுகாதார சேவைகள் திட்டத்தின் கீழ் சுகாதார ஊழியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி நெறிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ். பல்கலைக்கழக கல்விப் பிரிவினருடன் இணைந்து நடாத்தப்பட்டுவரும் இந்தப் பயிற்சி நெறியில் வினைத்திறன், ஆளுமை, சமூகத்துடன் இணைந்து செயல்படும் முகமான பயிற்சி நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக கல்விப் பிரிவுத் தலைவர் கலாநிதி சபா ஜெயராசாவினால் வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சிநெறித் தொடரில் நாளை 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் விரிவுரைகள் நடைபெறும். -162

### ஆசிரியர் தினம்

# பாடசாலைகளில் கொண்டாட ஏற்பாடு

(உடுவில்)

உலக ஆசிரிய தினத்தைச் சிறப்பாக பாடசாலைகளில் கொண்டாடுவதற்கு தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை துரித ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

ஆசிரிய தினமான நாளை 6ம் திகதி 'விளக்கு' சஞ்சிகையினை வெளியிடவும் பேரவை முடிவுசெய்துள்ளது.

விளக்கு சஞ்சிகை வெளியீடு நாளை காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் நாள், விளக்கு சஞ்சிகை அறிமுகவிழா ஆகியன ஒவ்வொரு கல்விக்கோட்டங்களிலும் நாளை பிற்பகல் 2 30 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது. (109)

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நாளை 6ம் திகதி புதன்கிழமை ஆசிரியர் தினம் கொண்டாடப்படவுள்ளது. கல்லூரி ஆசிரியர்களும் ஆசிரியைகளும் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள் —ர

0 0 0

(சுன்னாகம்)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, அச்சுவேலி மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சபையும், மாணவர் தலைவர் அமைப்பும் இணைந்து கொண்டாட உள்ளன.

நாளை 6ம் திகதியன்று அச்சுவேலி மகா வித்தியாலய ஆசிரியர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பெற்றோர்களாலும், மாணவர்களாலும் கௌரவிக்கப்பட உள்ளனர்.

# பச்சிலைப்பள்ளி மக்கள் முற்றாக இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சி — அலிப்பளை இராணுவ நடவடிக்கை காரணமாக பச்சிலைப்பள்ளி பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பளை புலோப்பளை, அல்லிப்பளை, இந்திராபுரம், தம்பகாமம், கண்ணுகேணி, மாசார் சோரன்பற்று, கரந்தாய் பகுதி மக்கள் அனைவரும் முற்றாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு பகுதிகளிலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். இடம்பெயர்ந்து வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள 525 குடும்பங்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வடமராட்சிகிழக்குப்பிரிவு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பன நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புலோப்பளை, அல்லிப்பளையிலுள்ள பெரும்பாலான வீடுகள் விமானங்களுண்டு வீச்சு, ஷெல் தாக்குதலினால் சேதமடைந்துள்ளன. பளை மகா வித்தியாலயம் ஷெல் வீச்சினால் சேதமடைந்துள்ளன.

அல்லிப்பளை கடற்கரையோரத்தில் கடலில் தங்கூரமிட்டிருந்த படகுகள் விமானக் குண்டுவீச்சு, ஷெல் வீச்சினால் சேதமடைந்துள்ளன. —163-ரி

## தனிக் குடிசை வழங்குக

ஆனைப்பந்தி

அரியாலை சாவற்குடியிருப்பில் தங்கியுள்ள தீவக மக்களுக்கென கொட்டகைகள் அமைத்து அவற்றை ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து வழங்கப்பட்டுள்ளது

இதனை தனித்தனிக் குடிசைகளாக அமைத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்குமாறு இக்குடியிருப்பை நிர்வகித்து வரும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம் குடியிருப்புவாசிகள் கோரியுள்ளனர். -101

## மன்னாரில் தளபதி விக்ரரின் நினைவஞ்சலி

(அக்கராயன்)

மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன் கிராமத்தில் 12-10-86ல் இராணுவத்தினருடன் நேரடி மோதலில் வீரச்சாவடைந்த மன்னார் மாவட்ட முன்னாள் தளபதி லெப். கேணல் விக்ரரின் 7ம் ஆண்டு நினைவஞ்சலி எதிர்வரும் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன், ஆண்டான்குளம், ஆட்காட்டிவெளி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. -59

## நீர் விநியோகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொதுநூலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்று நீர்விநியோகமும் மரம்நாட்டு விழாவும் பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் திரு செல்வநாதர் தலைமையில் நடைபெற்றது.

திரு. எஸ். முருகேசபிள்ளை குழாய்க்கிணற்றிருந்து நீர்விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். இதனையடுத்து யாழ் உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் திரு க. இராசையா நாவல் மரக்கன்றுகளை நாட்டி மரம்நாட்டும்விழாவை ஆரம்பித்து வைத்தார். -52

## சைக்கிள் விநியோகம்

(நெல்லியடி

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதினொரு கிராம சேவை அலுவலர்களுக்கும், நடமாடும் துவிச்சக்கர வண்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது (169)

## தொற்றுநோய் பரவுகிறது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. மடு அதிமுகாம் - பண்டிவிரிச்சான் - சின்னப் பண்டிவிரிச்சான் ஆகிய இடங்களில் போதிய வைத்திய வசதியில்லாததாலும் நுளம்புத் தொல்லையாலும் மலேரியா, வயிற்றோட்டம், அம்மை போன்ற தொற்று நோய்கள் பரவி வருவதாகவும் தெரியவருகின்றது. -59

## தீர்த்தத் திருவிழா

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய கடல் தீர்த்தத்திருவிழாவின்போது கடலில் சுவாமி தீர்த்தமாட ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படை அனுமதி மறுத்தபோதும் தீர்த்தத்திருவிழா கடலில் சிறப்பாக நடைபெற்றது -52

## ஆலங்கேணியில் பயணிகள்

(அரியாலை)

யாழ். குடாநாட்டுக்கு வருவதற்காக ஏராளமான பயணிகள் கடந்த ஒருவாரத்துக்கு மேலாக கிளிநொச்சி ஆலங்கேணி பகுதிகளில் தங்கி இருப்பதாக தெரியவருகின்றது.

இவர்களில் அநேகர் உறவினர்களின் மரணச்சடங்குகளில் கூட கலந்துகொள்ள முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. -59

## இலவச மூக்குக்கண்ணாடி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் 5-வது கட்டமாக இப்பகுதியிலுள்ள வசதியற்றவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது. லயன்ஸ் கழக பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களால் சிபார்சு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்குவிரைவில் இக்கண்ணாடிகள் வழங்கப்படுமென்று இதுபற்றி தெரிவிக்கப்படுகிறது. (72)


பார்க்க..... படிக்க..... பாதுகாக்க.....

மகிடாசுரனை வதம் செய்து தேவர்களை மகிழ்வித்து வெற்றிவிழா கொண்டாடிய புனித தினமான "விஜயதசமி" நன்னாளில் [ 24 - 10 - 93 ] எழில்கோலம் பூண்டு தமிழீழமெங்கணும் பவனி வருகின்றாள்.

வண்ணைக் கவிஞனின்



# துர்க்கா

இந்து, கலை, இலக்கிய இதழ்

★ தமிழீழத்தின் அனைத்து எழுத்தாள அன்பர்களிடமிருந்தும் பல்சுவை எழுத்தோவியங்கள் வரவேற்கப்படுகின்றன. 15 - 10 - 93க்கு முன் ஆக்கங்களை அனுப்பலாம்.

தொடர்பு: எஸ். கே. யோகநாதன், (பிரதம ஆசிரியர் "துர்க்கா") "கந்தன் அருள்" பட்டினசபை வீதி, மானிப்பாய்.

(கி-505)

யாழ்ப்பாணம்



★ வாழைச்சேனையில் —

# பொலிஸார்-முஸ்லிம் மோதல் பல கடைகள் தீக்கிரையாகின

(மட்டுநகர்)

வாழைச்சேனையிலுள்ள ஓட்டமாவடிப் பகுதியில் முஸ்லிம்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு முஸ்லிம்கள் படுகாயமடைந்துள்ளதுடன், முஸ்லிம்களின் 10 வீடுகளையும், 12 கடைகளையும், பல வாகனங்களையும் பொலிஸார் எரித்து சாம்பலாக்கியதுடன் முஸ்லிம்களின் உடமைகளையும் கொள்ளையடித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் ஒருவருக்கு பத்திரிகை விநியோகிக்கும் முஸ்லீம் ஒருவர் பத்திரிகை இல்லை என்று கூறியபோது அவரை பொலிஸார் தாக்கியதினால் முஸ்லீம்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

இதன்பின்பே பொலிஸார், கூட்டமாக ஓட்டமாவடிக்குச் சென்று முஸ்லீம்களை தாக்கியதுடன் அவர்களின் சொத்துக்களுக்கும், உடமைகளுக்கும் சேதம் விளைவித்தனர். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றுள்ளது. (வி-இ)

## ராணுவம் சுட்டு ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்திலிருந்து கட்டுவன் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற ஒருவர் நேற்று இராணுவத்தின் சூட்டுக்கு இலக்காகி பலியானார்; மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லமணி பிரபாகரன் (வயது 16) என்பவர் பலியானார். இவரது சடலம் மீட்கப்படவில்லை. கின்னத்துரை சண்முகராசா (வயது 36) என்பவர் படுகாயமடைந்தார். (165-சி)

தென்மராட்சியில்

# 90000க்கும் மேற்பட்டோர் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஒபரேஷன் யாழ்தேவி நடவடிக்கையினால் நேரடியாகவும் அதன் தாக்கத்தினாலும் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியோரின் எண்ணிக்கை ஒன்பதினாயிரத்திற்கும்மேற்பட்டதெனபுள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து 3250 குடும்பங்களும் தெற்பலி ஆனந் குடியிருப்புகளிலிருந்து 1000 குடும்பங்களும் தென்மராட்சியிலிருந்து அச்சுவேலியும் அதையண்டிய பகுதிகளிலிருந்தும் 1200 குடும்பங்களும் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து 4000 குடும்பங்களும் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளன. (158-162-இ)

ஊரடங்கு வேளையில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் விமானங்களின் குண்டு வீச்சுத் தாக்குதலினால் அரசசார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் தாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மேற்படி அறிவிப்பு பாதுகாப்பமைச்சினுடையதாக இருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளும் இதனால் பெருமளவு பாதிக்கப்படுமெனவும் அறிய முடிகிறது. (158-இ)

# கர்ப்பிணிப் பெண்களுக்கு கைதடியில் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அல்லிப்பளை, புலோப்பளை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து சாவகச்சேரி, கைதடி பிரதேசங்களில் தங்கியிருக்கும் கர்ப்பிணிப் பெண்கள் தொடர்ந்தும் தமது சிகிச்சைகளை கைதடி சித்த வைத்தியசாலையில் மேற்கொள்ளலாமென யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்: தற்பொழுது கைதடி சித்த வைத்தியசாலையில் பிரசவத்துக்கான சகல வசதிகளும் உண்டென்றும், சாவகச்சேரி, கைதடிப்பகுதிக்கு அண்மையில் இருப்பதாலும், யாழ் போதனா வைத்திய சாலையை நாடாது கைதடி சித்த வைத்தியசாலையில் மேற்கொள்ளும்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (162 – இ)

17,000 இராணுவத்தினர்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கும் சரியான பயிற்சி இல்லை. முன்னணிப் போரில் ஈடுபடுபவர்கள் ஒரே ரெஜிமென்டை சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களே ஒவ்வொரு யுத்தத்திற்கும் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அரசு எதிர்வரும் தேர்தலை கருத்திற்கொண்டு இராணுவ பலவீனத்தைக் காட்டாதிருப்பதற்காக இராணுவ தீர்வென்ற கடும் சோதனையில் இறங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (சி)

# நெருக்கடி கால யாழ்-வன்னி தொடர்புசேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும், வன்னிக்குமிடையே தற்போது போக்குவரத்துச் சீர்கேடு காரணமாக ஏற்பட்டுள்ள தகவல் பரிமாற்றத் தடங்கல்களைக் கருத்திற்கொண்டு யாழ். நகருக்கும், கிளிநொச்சிக்கும் இடையேயான தொடர்புச் சேவை நடைபெற்று வருகின்றது.

இச்சேவைக்கான செயலகங்கள், [illegible] வீதியில் உள்ள ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சியில் பழைய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும், மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்குகின்றது.

செயலகங்கள் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணி வரையும், மாலை 1 30 மணி தொடக்கம் 5-00 மணி வரையும் இயங்கும்.

வாரத்தில் 7 நாட்களும் மேற்குறிப்பிட்ட நேர ஒழுங்குப்படி கருமபீடங்கள் இயங்கும்.

சலுகை

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும், மரண அறிவித்தல் செய்திகளும் சலுகை அடிப்படையிலான செய்திகளாகக் கொள்ளப்படும். குறிப்பிட்ட கிராமப் பொறுப்பாளர் அல்லது கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வரும் செய்திகள் மாத்திரமே மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படையிலான தகவல்களாக ஏற்றுக்கொள்ளப்படும். —இ

அரசுக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது: கிளாலியில் இருந்து இலங்கை இராணுவம் மேலும் யாழ். நகரை நோக்கி முன்னேற இருந்த முயற்சியை நிறுத்தி படை அதிகாரிகள் இராணுவத்தை ஆனையிறவுக்கு திருப்பி அழைக்க வேண்டுமென்று தீர்மானம் எடுத்தார்கள். அதன் பிரகாரம் அவர்கள் திருப்பி அழைக்கப்பட்டார்கள்.

படை உயரதிகாரிகளின் புத்திசாதுர்யமற்ற கருத்துக்களை கேட்டு ஜனாதிபதி மிகவும் சந்தோஷத்தோடு இந்த இராணுவ நடவடிக்கைக்கு சம்மதம் தெரிவித்துள்ளார் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் எச். பி. திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

சில மீட்டர் தூரத்தை கைப்பற்றியதில் வெற்றி கொண்டதாக கூறும் படையினர் பல சேதங்களுடன் திரும்பி உள்ளார்கள் என்று நவசமசமாஜக்கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார் என்றும் எமது [illegible] தெரிவித்தார். (ம-இ)

## விலை நிர்ணயமும் விநியோகமும்

(யாழ்ப்பாணம்)

களைநாசினி, கிருமிநாசினி போன்றவற்றுக்கு விலை நிர்ணயம் செய்தல் தொடர்பாகவும், விநியோகிப்பது தொடர்பாகவும் கலந்தாலோசிப்பதற்கான கூட்டம் ஒன்று, இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்திற்குச் சகல விற்பனை முகவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். —இ

## உலக ஆசிரியர் தினம் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் தினம் நாளை புதன்கிழமை தமிழீழமெங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு சகல பாடசாலைகளிலும் மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆசிரியர்களைக் கௌரவித்துப், பரிசில்கள் வழங்கிப் பாராட்டிக் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்துவர்.

சகல கல்விக் கோட்டங்களிலும் நாளை பிற்பகல் 2-30 மணியிலிருந்து ஆசிரிய தின நிகழ்ச்சிகள் இடம்பெறும். காலை 10-00 மணிக்கு 'விளக்கு' மாத இதழ் வெளியீடு யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெறும்.

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் தின நிகழ்வுகள் கோட்ட ரீதியில் வெகு சிறப்பாக கொண்டாட ஏற்பாடாகியுள்ளது. (இ)

## வவுனியா செல்வோருக்கு அனுமதிப் பத்திரம்

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து வவுனியா நகருக்குச் செல்பவர்களுக்கு நாளாந்த அனுமதிப் பத்திரம் ஒன்று வழங்கப்படும் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மற்றும் கிராம சேவையாளரின் சிபாரிசின் பேரில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வவுனியா செல்வோருக்கு ஒரு வாரம் தங்கியிருப்பதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுமாம்.

வவுனியா மாவட்டத்தில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு மூன்று மாதத்திற்கு ஒருதடவை அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்படும்.

கொழும்பு செல்வோர் விசேட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் வவுனியாவில் இப்படிவங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# பாதுகாப்பை ஏற்க கருணாநிதி முடிவு

(சென்னை)

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தமிழக அரசு தமக்கு வழங்கும் பாதுகாப்பினை ஏற்றுக்கொள்ளப்போவதாகத் தெரிவித்துள்ளதாக அக்கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் ஆர்க்காடு வீராசாமி சென்னையில் நேற்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் திரு. கருணாநிதியின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என மத்திய அரசு அவருக்கு விடுத்த எச்சரிக்கையையடுத்து அவர் இம்முடிவை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்பே திரு கருணாநிதி மேற்படி முடிவுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-சி)

திருநெல்வேலி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்கு வந்துவிட்டதால் அவர்கள் இதிலிருந்து தப்பித்துக்கொண்டனர்.

இச்ஷெல்லின் சிதறல்கள் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்திலும் வீழ்ந்ததால் அங்கு நடைபெற்றுக்கொண்டிருந்த உதைபந்தாட்டப்போட்டி இடைநிறுத்தப்பட்டது. (158-வி-இ)

விடுதலைப் புலிகளுக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஒபரேஷன் யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை மூலம் கிளாலியை கைப்பற்றுவதும் அங்கு தரித்து பாரிய கட்டளைப் படைத்தளத்தை ஏற்படுத்துவதுமே படையினரின் நோக்கமாயிருந்தபோதும் புலிகளின் மிகக் கடுமையான எதிர்த்தாக்குதலால் ஏற்பட்ட பாரிய இழப்புகள் இத்திட்டங்களை தவிடுபொடியாக்கிவிட்டன.

மேலும் இப்பகுதியில் நிலைகொண்டால் புலிகளின் முற்றுகைக்கு இலக்காகி மேலும் பெரும் அழிவை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என பல இராணுவ ஆய்வாளர்கள் எச்சரித்ததையடுத்து 'ஒபரேஷன் யாழ்தேவியின் நோக்கம் முற்றுப்பெறாத நிலையில் படையினர் புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் பின்வாங்கினர்.

இம்முறை இடம்பெற்ற போரில் இதுவரை காலமும் இல்லாதவாறு புலிகள் நேருக்கு நேர் நின்று படையினருக்கு மிகப்பெரும் உயிரழிவையும் இராணுவத் தளபாட அழிவையும் ஏற்படுத்தியதை இராணுவ உயர் அதிகாரிகள் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலில் படையினர் 150க்கும் மேற்பட்டோரை இழந்ததுடன் 280 பேர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே. (இ-க)

## வேங்கைகளுக்கு நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 8-00 மணிக்கு சகல கோட்டங்களிலும் உள்ள பன்னிரு வேங்கைகளின் தூபிகள், நினைவுருவப்படங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்களில் ஈகைச்சுடர்கள் ஏற்றியும், மாலைகள் அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தியும் 6ம் ஆண்டின் நினைவினையொட்டி அப்பன்னிரு வீரமற வேங்கைகளுக்கும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (இ)

சாவகச்சேரியில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த கதிர்காமு சுந்தரலிங்கம் (வயது 30), முத்துசாமி தம்பிராசா (வயது 38) ஆகியோர் காயமடைந்தனர்.

இதேவேளை சாவகச்சேரி பகுதியில் நேற்று பல இடங்களில் ஹெலித் தாக்குதல் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

யாழ். அரச அதிபர்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேச செஞ்சிலுவைச்சங்கத்தினூடாக ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கவுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வாறான மனிதாபிமானமற்ற செயற்பாட்டினால் மக்களுக்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவைகள் பெருமளவு பாதிக்கப்படுமென்பதனையும் இவ்வாறான தடை உத்தரவை நீக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கும்படியும் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கொழும்பிலுள்ள அதன் தலைமைக் காரியாலயத்திற்கு செய்தி ஒன்றை அவசரமாக அனுப்பி வைத்துள்ளது. (158-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B: